Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/29/2021**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டினை, 2021, புனித சூசையப்பர் ஆண்டாக அறிக்கையிட்டு **"ஒரு தந்தையின் இதயத்தோடு"** என்ற திருத்தூது மடலை டிசம்பர் 8, 2020 அன்று அகிலஉலக திருஅவைக்கு அளித்துள்ளார். புனித யோசேப்பு திருஅவையின் பாதுகாவலராக அறிவிக்கப்பட்ட 150-ஆம் ஆண்டு நிறைவின் நினைவாக இத்திருத்தூது மடலை திருத்தந்தை அவர்கள் எழுதியுள்ளார்.

திருத்தந்தையின் திருத்தூதுமடலில் உள்ளடங்கிய புனித யோசேப்பைப் பற்றிய சில முக்கிய அம்சங்களை இச்சுற்றுமடல் வாயிலாக உங்களுக்கு தெரிவிப்பதோடு நமது மறைமாவட்டத்திலும் பங்களவிலும் எவ்வாறு புனித யோசேப்பின் ஆண்டை கொண்டாட வேண்டுமென அறிவுறுத்துகின்றேன்.

- புனித யோசேப்பு மரியாவிற்கு கணவராகவும் ஈசோவுக்குத் தந்தையாகவும் விளங்கியவர். திருக்குடும்பத்தின் பாதுகாவலராகத் திகழ்ந்தவர். ஈசோ ஞானத்திலும் வயதிலும் வளர தன்னை முழுவதும் தியாகம் செய்தவர் (எண் 8)
- மீட்பின் வரலாற்றில் எல்லாராலும் அன்பானத் தந்தையாகப் போற்றப்படுபவர் புனித யோசேப்பு.

- மிகவும் கனிவானத் தந்தையாக ஈசோவுக்கு விளங்கி, ஈசோ ஞானத்திலும் வயதிலும் வளர அவருக்குத் துணை நின்றவர் புனித யோசேப்பு (ஓசே 11:3,4; திபா 103:13).
- இறை அன்புக்குச் சாட்சியாக விளங்கியவர் புனித யோசேப்பு (எண் 11). இறைவனின் இரக்கம் எப்படிப்பட்டது என்பதை ஈசோ, தந்தையின் இரக்கத்தைப் பற்றிய உவமை வழியாக (லூக் 15:11-32) நமக்கு எடுத்துரைக்கின்றார்.
- புனித யோசேப்பின் வாழ்க்கை, இறை நம்பிக்கையால் எல்லா அச்சங்களையும் வாழ்க்கையில் எழும் புயல்களையும் துன்பங்களையும் துயரங்களையும் நம்மால் மேற்கொள்ள முடியும் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.
- புனித யோசேப்பு எல்லா பிரச்சினைகளுக்கும் கனவுகளில் அவருக்கு வானதூதரின் வழியாக கிடைத்த இறைச்செய்தியின் வழியாக விடை கண்டவர்.
- புனித யோசேப்பு ஒரு பள்ளிக்கூடம்; அங்கே குழந்தை ஈசோ கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் என்று சொல்லலாம் (லூக் 2:51, பிலி 2:8, எபி 5:8)
- நிபந்தனையில்லாமல் அனைவரையும் ஏற்றுக் கொண்டவர் புனித யோசேப்பு. எல்லா சூழ்நிலைகளிலும் மரியாவை எந்தவித நிபந்தனையும் இன்றி யோசேப்பு ஏற்றுக்கொண்டார். இந்த ஏற்றுக்கொள்தலுக்கு அடித்தளமாக இருந்தது ஆண்டவரின் தூதர் அவருக்குச் சொன்னதை அவர் அப்படியே நம்பியதே.
- புனித யோசேப்பு ஒரு தச்சர். தச்சுத் தொழில் செய்து அவரது குடும்பத்தைக் காப்பாற்றியவர். உழைத்து வாழ வேண்டும் என்ற ஒரு சிறந்த உண்மையை உலகுக்கு உணர்த்தி நிற்பவர் புனித யோசேப்பு. இறைமகன் ஈசோ புனித யோசேப்போடு இணைந்து உழைத்தவர். உழைப்பின் வழியாக மனிதன் கடவுளின் படைப்புப் பணியில் பங்கு பெறுகின்றான். எனவே உழைக்கும் சூழ்நிலையை எல்லாரும் அனுபவிக்க வேண்டும் என்று புனித யோசேப்பிடம் நாம் மன்றாடலாம்.

- கடவுள் மனிதர்களை அன்பு செய்வது போல (இச 1:31) புனித யோசேப்பு ஈசோவை அன்பு செய்தார் (எண் 25); பொறுப்புணர்ச்சி மிகுந்த தந்தையாக அவர் விளங்கினார்.
- புனித யோசேப்பை பின்பற்றி, ஏழை, எளிய, அனாதைக் குழந்தைகளைப் பார்த்து ஒவ்வொரு அருள்பணியாளரும், ஒவ்வொரு ஆயரும், புனித பவுலடியாரைப்போல "கிறிஸ்துவைச் சார்ந்த உங்களுக்கு ஆசிரியர்கள் பல்லாயிரம் இருக்கலாம்; ஆனால் தந்தையர் பலர் இல்லை. நற்செய்தி வழியாக நான் உங்களை கிறிஸ்தவர்களாக ஈன்றெடுத்தேன்" (1கொரி 4:15) என்று சொல்ல வேண்டும். இன்றைய உலகத்திற்குத் தேவை சர்வாதிகாரிகள் அல்ல; மாறாக தியாகம் நிறைந்த தந்தையர்கள்.
- மௌனம் காத்தவர் புனித யோசேப்பு. அவர் மௌனம் காத்ததற்குக் காரணம் எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக்கொள்வார் என்று அவர் நம்பியது. அவர் முழுதும் கடவுளை நம்பியதால் முழு சுதந்திரத்தோடு வாழ்ந்தார்.

புனித யோசேப்பு ஆண்டு, ஒரு வருட காலம் முழுவதும் நீண்டு நின்றாலும், நமது மறைமவாட்டத்திற்குட்பட்ட எல்லா பங்குகளிலும் வருகின்ற மார்ச் மாதத்தை புனித யோசேப்பு மாதமாக அனுசரிக்க உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இத்தவக்காலத்தில் ஈசோவின் பாடுகளையும் மரணத்தையும் உயிர்ப்பையும் நினைவுக்கூறுகின்ற நமக்கு, மீட்பின் வரலாற்றில் புனித யோசேப்பு மிகப்பெரிய பங்கினை வகித்துள்ளார் என்ற உணர்வு இம் மார்ச் 19 தேதி அன்று நாம் கொண்டாடுகின்ற அவரது திருநாள் நமக்கு உணர்த்துகின்றது.

புனித யோசேப்பின் ஆண்டாகிய இவ்வாண்டில் கீழ்கண்ட செயல்பாடுகளை நமது பங்களவில் செய்யலாம்.

1. புனித யோசேப்பின் சுரூபம் வீடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிறப்பு வழிபாடு நடத்தப்படலாம்.
2. தினந்தோறும் இல்லங்களில் புனித யோசேப்பின்முன் கூடிச் செபிக்கலாம்.
3. புனித யோசேப்பிற்குரிய சிறப்பு நாளாக விளங்கும் புதன்கிழமைகளில் சிறப்பு திருப்பலிக்கு ஏற்பாடு செய்யலாம்.

4. மார்ச் மாதத்தைப் “புனித மாதம்” என்று அறிவித்து, அம்மாதத்தில் புனித யோசேப்பைச் சிறப்பிக்கலாம்.
5. புனித யோசேப்பின் தியானம், திருக்குடும்ப தியானம் போன்ற தியானங்களுக்கு ஏற்பாடு செய்யலாம்.
6. பங்கிலுள்ள மிகவும் ஏழ்மையான ஏதாவது ஒரு விதவைக்கு வீடு கட்டிக் கொடுக்கலாம்.
7. திருப்பலியில் விசுவாசிகளின் மன்றாட்டுகளோடு (காறோசூசா) புனித யோசேப்பை நோக்கிய கீழ்குறிப்பிடும் சிறப்பு மன்றாட்டை செபிக்கலாம்.

இறுதியாக, புனித யோசேப்பு ஒரு வார்த்தைகூட பேசாமல் நான்கு கனவுகள் வழியாக (மத் 1:20, 21; 2:13; 2:20; 2:22) இறைவன் வானதூதர் வழியாக கூறியது அனைத்தையும் அப்படியே நம்பி, இறையன்புக்கும் பிறரன்புக்கும் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் கையளித்தார். அன்பே உருவான புனித யோசேப்பு திருக்குடும்பத்தைக் கண்மணிபோல் காப்பாற்றியது போல நம் குடும்பங்களையும் காப்பாற்றுவாராக!

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
16.02.2021

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

**✠ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

இச்சுற்றுமடலை அனைவரது புரிதலுக்காக பெப்ருவரி 28, 2021 அன்று திருப்பலியிடையே அனைத்து ஆலயங்களிலும் வாசிக்கவும்.

# புனித யோசேப்பு ஆண்டு 2021

## மார்ச் மாத காறோசுசா

### புனித யோசேப்பை நோக்கி மன்றாட்டு - காறோசூசா

**திரு.ப :** புனித யோசேப்பே! எங்கள் மீட்பரின் பாதுகாவலரே, புனித கன்னிமரியாவின் கணவரே, உம்மிடம் கடவுள் அவர் மகனை ஒப்படைத்தார். உம்மீது மரியா நம்பிக்கையை வைத்தார். உம் பாதுகாப்பில் கிறிஸ்து மனிதரானார். எனவே நீர் எங்களுக்குத் தந்தையாக இருந்து எங்களது வாழ்க்கைப் பயணத்தில் நீர் வழிகாட்டியாக இரும். எங்களுக்குத் தேவையான அருளையும் இரக்கத்தையும் துணிச்சலையும் பெற்றுத்தந்து எல்லாத் தீமைகளிலிருந்தும் எங்களைப் பாதுகாத்தருள வேண்டுமென்று உம்மை நோக்கி மன்றாடுகிறோம்.

**மக்கள்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.